140-க்கு 130, மார்ச்சில் 180-க்கு 140 தான் கிடைத்தது. இந்த அடிப்படையில் முழுவதும் எடுத்துக்கொள்வது என்ற அடிப்படையில் இருக்கிறது. கார்ப்பரேஷனுக்கு எந்தத் தீங்கும் ஏற்படாத அளவிற்கு பாதுகாத்துக் கொள்ள இந்த அரசு முயன்று வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்பொருள் குறித்து வருகிற மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கையின் மீதான விவாதத்தின் போது விரிவாகப் பேச வாய்ப்பிருப்பதால் அடுத்த வினாவிற்குப் போகிறேன்.

Lease of Agricultural lands in Nilgiris district

***145 Q.—Thiru A. M. RAJA : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the amount realised by Government by way of lease of agricultural lands to cultivators in the Nilgiris district during the years 1966–67 and 1967–68 ?**

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : 1966–67-ல் ரூ. 1,014.16-ம், 1967–68-ல் ரூ. 1,015·71-ம் அரசாங்கத்துக்குக் கிடைத்தன.

திரு. ஏ. எம். ராஜா : நீலகிரி மாவட்டத்தில் காப்பி, தேயிலைத் தோட்ட முதலாளிகளுக்கு 50-ல் இருந்து 99 ஆண்டுகள் வரை நீண்ட காலத்திற்கு மிகக் குறைந்த தொகையில் நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்றன இப்போது வாழ்க்கைப் புள்ளியும், விலைவாசியும் ஏறியிருக்கின்றன. ஆகவே, இந்த நிலைமைக்கேற்ப அந்தக் குத்தகையை ஏற்ற அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இது சம்பந்தமாக விரிவான மாறுதல்களைச் செய்ய அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : நீலகிரி மாவட்டத்தில் பெரிய முதலாளிகளுக்கு குத்தகைக்கு நிலங்களை விடுவதை விட ஓரளவு மத்தியதர குடும்பங்களாகப் பார்த்து குத்தகைக்கு நிலங்களை விடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அரசாங்கம் ஏதாவது செய்துகொண்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : குத்தகைக்கு விடுவது என்பதை விட பெரும்பாலான இடங்களில் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே குத்தகையால் ஏக்கருக்கு 3,000, 4,000 ரூபாய் வருவதற்குப் பதிலாக பெனல்டி என்று 20 மடங்கு போட்டாலும் மிகக் குறைவாகத் தான் வருகிறது. இத்தகைய விசித்திரமான நிலை இருந்து வருகிறது. இவைகளை எல்லாம் சீராக்குவதற்கு, ஒருமுகப்படுத்துவதற்கு இது சம்பந்தமாக ஒரு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீலகிரி மாவட்டக் கலெக்டர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அதையொட்டி இது சம்பந்தமாக நல்ல முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

திரு. மா பா. சாரதி : நீலகிரி மாவட்டத்தில் நம் அரசுக்குச் சொந்தமான நிலங்கள் எவ்வளவு ஏக்கர் இருக்கின்றன ? அதிலிருந்து வரும் மொத்த வருவாய் ஆண்டுக்கு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அரசுக்குச் சொந்தமான நிலம் என்றல்ல. பெரும்பாலான ஏக்கர்கள் பட்டா செய்யப்படாமலும், சிலபல குத்தகைக்கு விடப்பட்டும் இருக்கின்றன.

திரு. ஜெ பெள்ளி கௌடர் : நீலகிரி மாவட்டத்தில் சர்க்காருக்கு சம்பந்தப்பட்ட நிலங்கள் இருக்கின்றன. அதை விவசாயிகள் ஆக்கிரமித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களிடம் அபராதம் விதித்து வசூல் செய்கிறார்கள். அதையே குத்தகைக்கு விட்டால் ஏராளமான வருமானம் சர்க்காருக்கு வரும். ஆகவே, அவைகளை குத்தகைக்கு விடும் திட்டத்தை பரவலாக்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஆக்கிரமிப்புகளை அகற்றும் பொது அங்கிருந்து பெரிய எதிர்ப்பெல்லாம் வருகிறது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு பெரிய மாறுதல்களை இது சம்பந்தமாக ஏற்படுத்த

வேண்டுமென்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அது உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். பொது மக்களுடைய பேராதரவும், சட்டமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்பும் இருந்தால் இதைத் துரிதப்படுத்த வசதியாக இருக்கும்.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, நீலகிரி ஜில்லாவில் எரிமாடு என்ற பிரதேசத்தில் இருக்கிற விவசாயிகள் அந்தப் பிரதேசத்தில் இருக்கிற நிலத்தைத் தங்களுக்குக் குத்தகைக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுள்ளதைப்பற்றி என்ன முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதைப்பற்றிய தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : நீலகிரி மாவட்டத்திலே குத்தகைக்கு விடப்படுகின்ற நிலங்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு எவ்வளவு குத்தகை வாங்கப்படுகிறது ? உருளைக் கிழங்கு, காப்பி, தேயிலை போன்ற பணப் பயிர்கள் பயிரிடுவதால் வருவாயை அதிகரிக்க எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : அங்கு ஏக்கர் ஒன்றுக்கு ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என்று குத்தகைக்கு விடப்பட்டிருந்த நிலங்களுக்கு 1966-ம் ஆண்டோடு ஒப்பந்தம் தீர்ந்துவிடுகிறபடியால் புதிதாகப் புதுப்பிக்கக்கூடிய நேரத்தில் எத்தனை ஏக்கர் யார் யாருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. மு. ச. சிவசாமி : நீலகிரி மாவட்டத்தில் 100 வருஷ காலத்திற்கு குத்தகைக்கு காப்பி, தேயிலை தோட்டங்களைப் பயிர் செய்வதற்கு விடப்பட்டது முடியும் தருவாயில் இருக்கிறது. ஆகவே, அது முடிந்தவுடன் அந்த நிலங்கள் பகிரங்க ஏலத்தில் விடப்படுமா அல்லது ஏற்கெனவே வைத்திருந்தவர்களுக்கே விடப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இது கொள்கை பற்றிய கேள்வி. இந்தக் கேள்வியோடு சம்பந்தப்பட்டதல்ல.

திரு. சு. துரைசாமி : அந்த நிலங்களைக் குத்தகைக்கு எடுத்திருக்கிற சில பேர் சொந்தமாக விவசாயம் செய்யாமல் வேறு ஒருவருக்கு அதிகமான குத்தகைக்கு விட்டு விடுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதுபற்றிய விவரம் இல்லை. குறிப்பாக கனம் அங்கத்தினர் அதைப் பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

Surplus lands under the Land Reforms Act.

* 146 *Q.*—THIRU S. RAMACHANDRAN ; Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the extent of lands declared as surplus under the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 and the steps taken to distribute these lands to the landless tillers ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தமிழ்நாடு 1961-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நில உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் கீழ் இதுவரை 25,147 ஏக்கர் பரப்பு உபரியென அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் 6,230 ஏக்கர் தடை ஆணை விதிக்கப்பட்ட நிலங்களும், பயிர் வளர்ந்து வரும் நிலங்களும் அடங்கும். மீதியுள்ள 18,917 ஏக்கர் பரப்பினை